**This Question Paper consists of 45 questions 16 printed pages.**
**16 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 45 வினாக்கள் உள்ளன.**

**Roll No.**
**பதிவு எண்:**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

**Code No. 69/S/A/TM**
**குறியீடு எண்:**

**Set / பகுதி - A**

# TAMIL
# (தமிழ்)
# (237)

Day and Date of Examination
(தேர்வு நாள் மற்றும் தேதி) : ______________________

Signature of Invigilators
(தேர்வு மேற்பார்வையாளரின் கையொப்பம்) :

**1.** ______________________

**2.** ______________________

**பொதுக்குறிப்புகள் :**

1. அனைத்து கேள்விகளுக்கும் உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள விடைத்தாளில் பதில் அளிக்கவும்.
2. இந்தக் கேள்வித் தாளைப் படிப்பதற்கு **15** நிமிட நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. கேள்வித் தாள் **02.15** மணிக்கு வழங்கப்படும். **02.15** லிருந்து **02.30** வரை மாணவர்கள் கேள்வித் தாளை மட்டும் படிக்க வேண்டும். மேலும் இந்த நேரத்தில் எந்த பதிலையும் விடைத்தாளில் எழுதக்கூடாது.
3. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.
4. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.
5. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (அ, ஆ, இ, ஈ) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.
6. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.
7. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.
8. உங்களது வினாத்தாளின் எண்ணை குறியீடு எண்: **69/S/A/TM** செட் - **A** விடைத்தாளில் எழுதவும்.

# TAMIL

# (தமிழ்)

# (237)

கால அளவு : **3** மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : **100**

---

**குறிப்பு :** (1) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

(2) விடைகளுக்குரிய **சரியான** வினா எண்களை எழுதவும்.

---

**பகுதி - அ**

**பிரிவு - அ : தேர்ந்தெடுக்கப்பட்ட பாடப்பகுதி**

**(5 செய்யுள் + 9 உரைநடை = 14 மதிப்பெண்கள்)**

**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

**1** உலகம் எவரை முதன்மையாகக் கொண்டுள்ளது? (1 மதிப்பெண்)

**2** சேர நன்னாடு என்பது எது? (1 மதிப்பெண்)

**3** அ. உரிமைச் செம்பயிரில் தமிழ் என்னவாக இருக்கிறது? (1 மதிப்பெண்)

**4** அ. பெண் உரத்த குரலில் பேசினால் என்ன பழி சுமத்தப்படுகிறது? (1 மதிப்பெண்)

**5** அ. தேவர் உலகம் வரை மணம் பரப்பும் மலர் எது? (1 மதிப்பெண்)

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் 6-7):**

குடும்ப நிலையை நினைத்து அஞ்சம்மாவுக்குத் தூக்கம் வரவில்லை. கண்கள் கசிந்துகொண்டே இருந்தன. முந்தானையால் துடைத்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். புருசன் வெள்ளைச்சாமியை இவளால் வெறுக்க முடியவில்லை. அன்பைக் காட்டுவதிலும் அடுத்தவர்களுக்கு உதவுவதிலும் அவனுக்கு இணையாக இந்த ஊரில் இன்னும் யாரும் பிறக்கவில்லை. இவள் சிவப்பாக இருந்தாலும் அவன் கருப்பாக இருந்தாலும் அவ்வளவு அழகாக இருப்பான். பலர் பிழித்தாலும் இவள் அதை ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை. இருவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பொருளாதாரத்தில் இரண்டு குடும்பங்களுக்குமிடையே மலைக்கும் மடுவுக்கும் என ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. வெள்ளைச்சாமிக்கு ஆறு மா நஞ்சை நிலமிருந்தது. இவள் வீட்டில் சம்மதிக்காட்டதால் ஓடிப்போய்த் திருமணம் செய்துகொண்டனர்.

**6** பின்வருவனவற்றுள் சரியா தவறா எனக்கண்டறிக: (1×2=2 மதிப்பெண்கள்)

(I) குடும்ப நிலையை நினைத்தவுடன் அஞ்சம்மாவுக்குத் தூக்கம் வந்தது.

(II) புருசன் வெள்ளைச்சாமியை அஞ்சம்மாவால் வெறுக்கமுடியவில்லை.

**7** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (1×1=1 மதிப்பெண்)

(I) வெள்ளைச்சாமியிடம் எத்தனை மா நலம் இருந்தது?

(அ) 6 (ஆ) 16

(இ) 36 (ஈ) 46

**8** பொருத்துக. (1×4=4 மதிப்பெண்கள்)

(அ) அன்னைக்குக் கடிதம் - வ.சு.ப. மாணிக்கனார்

(ஆ) தம்பிக்குக் கடிதம் - அண்ணா

(இ) உடன் பிறப்புக்குக் கடிதம் - மு. வ

(ஈ) தலைவருக்குக் கடிதம் - மு. கருணாநிதி

9 சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (1×2=2 மதிப்பெண்கள்)

(I) சாதாரண மக்களின் துன்பங்களை மூடி மறைத்துவிடுவது எது?

(அ) சர்வதேச அரசாங்கம் (ஆ) பொருளாதாரப் புள்ளி விவரங்கள்

(இ) மக்கள் தொகை (ஈ) வேலை வாய்ப்பு

(II) வர்த்தகம், வணிகம், ................ ஆகிய மூன்று அம்சங்கள் பின்னிப் பிணைந்தவை?

(அ) தொழில் நுட்பம் (ஆ) பாதுகாப்பு

(இ) முதலீடு (ஈ) அறிவியல் வளர்ச்சி

## பிரிவு - ஆ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் 10-11):**

ஒரு மரச்சட்டத்தில் இணைக்கோடுகளாக இருக்கும் கம்பிகளில் பாசிமணிகள் கொண்ட அமைப்பே அபாகஸ் சாதனம். இது 5000 ஆண்டுகளுக்கு முன்னர் புழக்கத்தில் இருந்த சாதனம். இது இன்றும் சீனா, ஜப்பான் நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஸ்காட்லாந்து கணக்கியலார் ஜான் நேப்பியர் எண்கள் பொறிக்கப்பட்ட குச்சிகளைக்கொண்டு கணக்கிடும் சாதனத்தைக் கண்டறிந்தார். இவை நேப்பியர் ராடுகள் என அழைக்கப்பட்டன.

642-இல் பிரான்சு நாட்டைச் சார்ந்த பீளேஸ் பாஸ்கல் அரித்தமடிக் எஞ்சின் (கணக்கு எந்திரம்) ஒன்றைக் கண்டறிந்தார். இதிலுள்ள பல்வேறு அம்சங்கள் இன்றைய எந்திரங்களிலும் பயன்படுகின்றன.

1694-இல் ஜெர்மன் நாட்டைச் சார்ந்த லீப்னிஸ், ஸ்டெப்புடுரெக்கனர் என்னும் கருவியை உருவாக்கினார். இக்கருவி கூட்டவும் கழிக்கவும் பெருக்கவும் வகுக்கவும் வர்க்கமூலம் காணவும் பயன்பட்டது.

1801-இல் ஜோசப்-மேரி ஜாக்வார்டு, பஞ்ச்சுடு கார்டுகள் (துளை அட்டைகள்) நுட்பத்தைக் கண்டறிந்தார். இந்நுட்பம் தறியின் இயக்கத்தைக் கட்டுப்படுத்த பயன்பட்டது.

1835-இல் பாபேஜ் 'அனல்டிகல் எஞ்சின்' என்னும் எந்திரத்தை உருவாக்கினார். இது, அன்று புரட்சிகர முன்னேற்றமாகும். செயலாற்றும் திறன், நினைவு அலகு ஆகியன இன்றைய கணினி போன்றே இருந்தன. நிதி பற்றாக்குறையால் சரிவர செய்துமுடிக்க முடியவில்லை.

1944-இல் ஹோவார்டு ஐகின் மார்க்-1 எனும் கணினியை வடிவமைத்தார். இது ஆட்டோமேட்டிக் சீக்வன்ஸ் கன்ரோல்டு கால்குலேட்டர் என்று அழைக்கப்பட்டது.

**10** பின்வருவனவற்றுள் விடுபட்ட இடங்களைப் பூர்த்தி செய்க. (3×1=3 மதிப்பெண்கள்)

(I) அரித்தமடிக் எஞ்சின் (கணக்கு எந்திரம்) கண்டறிந்தவர்..............................

(II) அனல்டிகல் எஞ்சின் என்னும் எந்திரம் உருவாக்கப்பட்ட ஆண்டு.....................

(III) லீப்னிஸ், எந்த நாட்டைச் சார்ந்தவர்..........................................................

**11** சரியான விடையைத் தெர்வு செய்து எழுதுக. (3×1=3 மதிப்பெண்கள்)

(I) ஜான் நேப்பியர் எந்நாட்டைச் சார்ந்தவர்?

(அ) ஸ்காட்லாந்து (ஆ) ஜெர்மன்

(இ) இந்தியா (ஈ) பிரான்சு

(II) ஸ்டெப்புடுரெக்கனர் கருவி உருவாக்கப்பட்ட ஆண்டு?

(அ) 1698 (ஆ) 1695

(இ) 1694 (ஈ) 1685

(III) கணக்கிடுவதற்காக முதலில் உருவாக்கப்பட்ட கருவி?

(அ) பஞ்ச்சுடு கார்டுகள் (ஆ) அனல்டிகல் எஞ்சின்

(இ) அரித்தமடிக் எஞ்சின் (ஈ) நேப்பியர் ராடுகள்

**பின்வரும் பத்தியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி (வினா எண் 12)**

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை எழுதியவர் பேராசிரியர் பெ.சுந்தரம் பிள்ளை. இவர் மனோன்மணீயம் என்ற கவிதை நாடகத்தை எழுதியமையால் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை என்ற பெயரைப் பெற்றார். இவர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். இவர் தந்தையார் பெயர் பெருமாள் பிள்ளை. மேலை நாட்டு நாடக அமைப்பைப் பின்பற்றித் தமிழில் முதன்முதல் கவிதை நாடகத்தைப் படைத்துள்ளார். ஆங்கிலத்தில் லிண்டன் பிரபு எழுதிய இரகசிய வழி என்ற நூலைத் தழுவி மனோன்மணீயம் நாடகத்தை எழுதினார். இந்நாடக நூலில் தமிழ்மொழி வாழ்த்துப் பகுதி உள்ளது.

**12** பின்வருவனவற்றுள் சரியா தவறா எனக் கண்டறிக. (1×5=5 மதிப்பெண்கள்)

(I) சுந்தரம் பிள்ளை தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

(II) இரகசிய வழி என்ற நூலைத் தழுவி மனோன்மணீயம் படைக்கப்பட்டது.

(III) மனோன்மணீயம் நாடகத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் உள்ளது.

(IV) சுந்தரம் பிள்ளை திருவிதாங்கூர் கல்லூரியில் பணியாற்றினார்.

(V) மனோன்மணீயம் ஒரு கவிதை நாடகம்.

**13** பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (1×1=1 மதிப்பெண்)

(I) மராட்டியருக்கு எதைப் பரிசளிக்க பாரதி விரும்புகிறார்?

(அ) வெற்றிலை (ஆ) கோதுமை

(இ) ஆயுதம் (ஈ) கேரளத்து யானைகள்

## பிரிவு - இ : இலக்கணம்

**14** பின்வருவனவற்றுள் வினா வாக்கியமாக மாற்றுக. (1×1=1 மதிப்பெண்)

(I) அப்துல்கலாம் பாதுகாப்பு ஆராய்ச்சி மையத்தில் பணிபுரிந்தார்.

**15** பின்வருவனவற்றுள் மரபுத்தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைக்க. (1×3=3 மதிப்பெண்கள்)

(I) வாய்க் கொடுத்தால் -

(II) தண்டச் சோறு -

(III) பொடிவைத்தல் -

**16** பின்வருவனவற்றுள் எதிர்மறைச் சொற்களை எழுதுக. (1×2=2 மதிப்பெண்கள்)

(I) நல்லது -

(II) மடுவு -

**17** பின்வரும் ஆங்கில சொற்களுக்கு இணையான கலைச்சொற்களை விடையளி. (1×2=2 மதிப்பெண்கள்)

(I) Capacitor -

(II) Versatility -

**18** பின்வரும் இரட்டைக்கிளவி சொற்களில் வாக்கியத்தில் அமைக்க. (1×1=1 மதிப்பெண்)

(I) குளு குளு -

## பிரிவு - ஈ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 19-20)**

நிலவு வெளிச்சத்தில் சிந்துநதியின் மீது சேர நாடாகிய கேரளத்துப் பெண்களுடன் அழகிய தெலுங்கு மொழியில் பாடல்களைப் பாடியவாறு படகுகள் ஓட்டி மகிழ்வோம்.

கங்கை நதிக்கரையில் பெருமளவில் விளைகின்ற கோதுமையைப் பெற்றுக்கொண்டு அதற்கு மாற்றாக காவிரி மண்ணில் விளையும் வெற்றிலையைத் தருவோம். வீரம்செறிந்த மராட்டியர்களிடமிருந்து கவிதைகளை வாங்கிக்கொண்டு அவற்றுக்காகச் சேரத்து யானைகளின் தந்தங்களைப் பரிசாகத் தருவோம்.

காசி நகரிலிருந்து ஒரு புலவன் பேசும் உரையைக் காஞ்சி நகரிலிருந்து கேட்பதற்கு ஏற்ற கருவியைக் கண்டுபிடிப்போம். இராசபுதன வீரர்களுக்குத் தங்கவயல் கொண்ட கன்னட மண்ணில் கிடைக்கும் உயர்ந்த தங்கத்தைத் தந்துமகிழ்வோம்.

உயர்ந்த பட்டு நூல்களில் ஆடை நெய்தும் தரமான பருத்தி நூல்களால் உடை நெய்தும் மலைபோல வீதிகளில் குவிப்போம். இவற்றைப் பெருமளவில் பொருள்கள் கொண்டுவரும் காசி நகர் வணிகருக்கு விற்றுமுடிப்போம்.

**19** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (1×3=3 மதிப்பெண்கள்)

(I) எந்த நதியின் மீது படகு ஓட்டிட பாரதி விரும்புகிறார்?

(அ) சிந்து (ஆ) கங்கை

(இ) காவிரி (ஈ) யமுனா

(II) அ. கங்கைக் கரையில் விளையும் பயிர்?

(அ) நெல் (ஆ) கரும்பு

(இ) சோளம் (ஈ) கோதுமை

**(அல்லது)**

ஆ. மாராட்டியருக்கு பாரதி பரிசளிக்க விரும்பியது?

(அ) பருத்தி ஆடை (ஆ) பட்டு நூல்

(இ) தந்தம் (ஈ) தாணியம்

(III) எம்மொழியில் பாடி படகு ஓட்ட பாரதியார் விரும்புகிறார்?

(அ) கன்னடம் (ஆ) தமிழ்

(இ) மலையாளம் (ஈ) தெலுங்கு

**20** பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். (1×1=1 மதிப்பெண்கள்)

(I) காஞ்சியில் கேட்பதற்கோர் ........................ செய்வோம்.

**21** பின்வருவனவற்றுள் சரியா தவறா எனக் கண்டறிக. (1×4=4 மதிப்பெண்கள்)

(I) எண் எனச் சொல்லப்படுவது கணக்குக் கலையாகும்.

(II) யாக்கை நிலையானது.

(III) முதுமைப் பருவத்தில் கற்றவன் வல்லவனாய்த் திகழலாம்.

(IV) கல்லாதவர் தம்மைத்தாமே புகழ்வர்.

**22** பின்வருவனவற்றுள் ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும். (1×2=2 மதிப்பெண்கள்)

(I) கானவர்கள் யாவர்?

(II) காகம் அணுகா மலை யாது?

## பகுதி - ஆ பிரிவு - அ

**(செய்யுள் 5 + உரைநடை 6 = 11 மதிப்பெண்கள்)**

**23** பின்வருவனவற்றுள் 20 முதல் 25 சொற்களில் விடையளிக்கவும். (1×2=2 மதிப்பெண்கள்)

(I) குறவர் இன மக்களின் நன்றியுணர்ச்சியை வெளிப்படுத்துக.

**24** பின்வருவனவற்றுள் 40 முதல் 45 சொற்களில் விடையளிக்கவும். (1×3=3 மதிப்பெண்கள்)

(I) நூல்களைக் கற்கும் முறையையும் கற்பதால் ஏற்படும் பயனையும் விளக்குக.

**25** பின்வரும் வினாக்களுக்கு 25 முதல் 30 சொற்களில் விடையளிக்கவும். (1×2=2 மதிப்பெண்கள்)

(I) நம் நாட்டின் பாதுகாப்பு வலிமைகள் பற்றி அப்துல் கலாம் குறிப்பிடுவன யாவை?

**26** (1×2=2 மதிப்பெண்கள்)

(I) நேரு கண்ட தீர்க்கத்தரிசனம் - விளக்குக?

**(அல்லது)**

(II) இந்தியா 2020 எனும் நூல் எதைப் பற்றியது?

**27** (1×2=2 மதிப்பெண்கள்)

(I) மனித மரங்கள் - நாடகத்தின் கருப்பொருள் என்ன?

**(அல்லது)**

(II) மரங்களை வெட்டுவதால் ஏற்படும் தீமைகள் யாவை?

## பிரிவு - ஆ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் 28-29):**

அரவம் என்றால் பாம்பு. இங்கு நாகப்பாம்புகளைச் சிறப்பாகக் குறிக்கிறது. இப்பாம்புகள் கக்கிய எண்ணிலடங்கா மணிகள் எங்கும் வழி கொடுக்கும். நிலவைத் தாங்கள் உண்ணுகின்ற சோற்று உருண்டை என யானைகள் நினைத்துக்கொண்டு அவற்றைப் போகவிடால் வழி மறிக்கும்.

குறவர்கள் தினைப் பயிரை விதைப்பதற்காகக் காடுகளில் உள்ள பலவகை மரங்களை அழிப்பர். அழிக்கப்பட்ட மரங்களுள் அகில், குங்குமம், சந்தனம் ஆகியவையும் அடங்கும். அம்மரங்களில் இருந்து காண்போரைக் கவரும் வகையில் நல்ல மணம் வீசும்.

மலைவாழ் ஆடுகள், காடுகள் எங்கும் ஓடிச்சென்று துள்ளிக் குதித்துப் பாயும். காக்கைகளும் பறவாத மிக உயர்ந்த மலையைத் தழுவிக்கொண்டு மேகங்கள் செல்லும்.

நீண்டு உயர்ந்த குறும்பலா மரத்தடியில் எழுந்தருளி இருப்பவரும் கயிலைமலையில் வாழ்பவருமான திருக்குற்றாலநாதர் நிலைபெற்றிருக்கும் இத்திருக்குற்றாலமலையே நாங்கள் வாழும் மலையாகும்.

**28** (I) குறவர்களின் பணி என்ன? (2 மதிப்பெண்கள்)

**29** (I) திருக்குற்றால மலைச் சிறப்பை விளக்குக? (2 மதிப்பெண்கள்)

**(அல்லது)**

(II) யானைகள் என்ன செய்யும்?

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் 30-32):**

கற்பக விருட்சத்தை உடைய சொர்க்க லோகத்தில் வாழ்கின்ற தேவர்கள்கூட விரும்புகின்ற சிறப்பும் சிந்தையால் நினைத்துப் பார்ப்பதற்கு அரிதும் விண்ணளாவ அளவிற்கு உயர்ந்து தோன்றுவதுமாகிய சபா மண்டபம் மேலும் சிறப்புப் பெறும் வகையில் தசரதன் அங்கு வந்துசேர்ந்தான்.

சிறப்பு மிக்க அம்மண்டபத்தில் அமைந்திருந்த சிங்காசனமானது மேலும் சிறப்படையுமாறு மிகுந்த பொலிவுடன் அரசன் அமர்ந்திருந்தான். அவனைப் பார்த்தவர்கள் இவன் தேவர் குலத் தலைவனான இந்திரனோ என்று ஐயம் கொண்டார்கள். பின்னர், இவனுக்கு ஆயிரம் கண்கள் இல்லையே என்று தெளிந்து இவன் இந்திரன் அல்ல என்ற முடிவுக்கு வந்தார்கள்.

சிங்கம் போன்ற வலிமை மிக்க அரசனின் எதிரில் உலக உயிர்களையும் தேவர்களையும் நான்முகனையும் நான் இப்பொழுதே படைப்பேன் என்று பெருங்கோபத்துடன் கூறிப் படைக்கத் தொடங்கியவனும் கோபம் நிறைந்தவனுமாகிய விசுவாசமித்திர முனிவர் தசரதனின் சபா மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார்.

**30** (I) தசரதனைக் காண வந்தது யார்? (2 மதிப்பெண்கள்)

**(அல்லது)**

(II) விண்ணளாவ அளவிற்கு உயர்ந்தது தோன்றியது எது?

**31** தசரதனை யாரோடு ஒப்பிட்டு ஐயம் கொண்டனர்? (2 மதிப்பெண்கள்)

**32** தசரதன் அரியணையில் அமர்ந்த தோற்றம் எவ்வாறு இருந்தது? (2 மதிப்பெண்கள்)

**33** பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை வரைக. (3 மதிப்பெண்கள்)

சிற்றிலக்கிய வகை - குறவஞ்சி - திருக்குற்றாலக்குறவஞ்சி - மலைவளம் - நீர்வளம் - செல்வவளம் - குறவன் - குறத்தி - திருமண உறவு - குறவஞ்சிப் பாடல்கள் - இனிய சுவை - இசையோடு பாடுதல் - தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு - பாரதியார் சிந்தனையோடு ஒத்திருத்தல்.

## பிரிவு - இ : இலக்கணம்

**34** பின்வரும் ஏதேனும் ஒன்றினைப் பிரித்தெழுதுக. (1×2=2 மதிப்பெண்)

(I) எழுத்தென்ப -

(II) உலகின்புறல் -

**35** பின்வரும் ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க. (1×2=2 மதிப்பெண்கள்)

(I) உயர்திணை என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(II) படர்க்கை என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**36** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினைச் சேர்த்து எழுதுக. (1×2=2 மதிப்பெண்கள்)

(I) மணல் + கேணி -

(II) தாம் + இன்புறுவது -

## பிரிவு - ஈ

**37** பின்வரும் வினாவிற்கு விளக்கமாக விடையளிக்கவும். (1×3=3 மதிப்பெண்கள்)

(I) 'கொங்குதேர் வாழ்க்கை' எனும் தொடங்கும் பாடலின் கருத்தை விளக்கி எழுதுக.

**38** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (1×2=2 மதிப்பெண்கள்)

(I) கற்றோரின் இயல்பு குறித்து விளக்குக.

(II) பழமொழி நானூறு - குறிப்பத் தருக?

**39** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (1×5=5 மதிப்பெண்கள்)

(I) காந்தியடிகளின் தென்னாப்பிரிக்கப் பயண அனுபவங்களை விளக்குக.

(II) தென்னாப்பிரிக்காவில் காந்திக்கு ஏற்பட்ட அவமானங்களை விளக்கியுரைக்க.

## பகுதி - இ - பிரிவு - உ

**40** பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (1×2=2 மதிப்பெண்கள்)

(I) குறத்தியர் யானைக் கொம்புகளால் .................... இடிப்பர்?

(அ) நெல் (ஆ) தினை

(இ) சர்க்கரை (ஈ) வற்றல்

(II) யார் இவ்வுலகில் நீடு வாழ்வர்?

(அ) ஏழை (ஆ) இறைவனை வணங்குபவர்

(இ) செல்வந்தர் (ஈ) கோபக்காரர்

(III) எழுத்துகள் எதனை முதன்மையாகக் கொண்டுள்ளது?

(அ) உகரம் (ஆ) அகரம்

(இ) மகரம் (ஈ) ஏகாரம்

**41** (1×1=1 மதிப்பெண்கள்)

(I) தமிழில் குறில் எழுத்துகள் எத்தனை?

(அ) 5 (ஆ) 7

(இ) 12 (ஈ) 18

(II) தமிழில் வல்லின எழுத்துகள் எத்தனை?

(அ) 5 (ஆ) 7

(இ) 12 (ஈ) 18

**42** பின்வருவனவற்றுள் சரியான விடையைக் கண்டறிக. (1×2=2 மதிப்பெண்கள்)

(I) பாரத நாடு நிலமகளின் ............... ஆக விளங்குகிறது?

(அ) நெற்றி (ஆ) கண்

(இ) முகம் (ஈ) உடல்

(II) குறுந்தொகையில் இடம்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை?

(அ) 400 (ஆ) 401

(இ) 402 (ஈ) 200

**43** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 20 முதல் 25 சொற்களுக்குள் விடையளிக்க. (1×2=2 மதிப்பெண்கள்)

(I) தமிழர்களின் இயல்பை மு.வ. எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

(II) காந்தியடிகளைத் திருக்குறளோடு ஒப்புமைப்படுத்தி மு.வ. கூறும் கருத்துக்களை விளக்குக.

**44** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (1×4=4 மதிப்பெண்கள்)

(I) அசோகரின் கட்டளைகள் குறித்து எழுதுக.

(II) சந்திரகுப்தரின் ஆட்சிக் குறித்து நேரு கடிதத்தில் கூறுவனவற்றைத் தெளிந்துரைக்க?

**45** 'பாரததேசம்' எனும் கவிதையில் பாரதியார் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக. (1×4=4 மதிப்பெண்கள்)